அவர்களில் திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமய்யா, எ. சுப்பிரமணியம், மனலி சி. கந்தசாமி, க. சுப்பு ஆகியோர் தங்கள் வேட்புத்தாள்களை திரும்பப் பெற்றுக் கொண்டதால், முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது நான்கு என்பதால், கீழ்க்கண்ட நான்கு வேட்பாளர்களும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் என நான் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திருமதி த. ந. அனந்தநாயகி
2. திரு. துரை முருகன்
3. திரு. என். கணபதி
4. திரு. முனு ஆதி

4. அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய பேரவையின் அனுமதியைக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சார், இந்தச் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 14—மருத்துவம்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் "கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,04,70,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்" என்ற கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss about the need to increase the number of seats in Medical Colleges and to change the procedure of selection of students for Medical Colleges, I move—

"That the allotment of Rs. 21,04,70,800 under Demand No. 14—Medical be reduced by Rs. 100"